
# ஜெபியுங்கள்,
## ஜெயம் பெறுங்கள்!



மோகன் சி. லாசரஸ்

# ஜெபியுங்கள்,
# ஜெயம் பெறுங்கள்!



மோகன் சி. லாசரஸ்

வெளியீடு:
**இயேசு விடுவிக்கிறார்,**
நாலுமாவடி – 628 211, தூத்துக்குடி மாவட்டம்.

**முதல் பதிப்பு : 1993 மே, 2,600 பிரதிகள்**
**2ம் பதிப்பு : 1995 ஆகஸ்ட், 5,000 பிரதிகள்**
**3ம் பதிப்பு : 2010 ஜனவரி, 2,000 பிரதிகள்**
**4ம் பதிப்பு : 2010 ஜுலை, 5,000 பிரதிகள்**
**5ம் பதிப்பு : 2013 ஆகஸ்ட், 2,000 பிரதிகள்**
**6ம் பதிப்பு : 2017 பிப்ரவரி, 2,000 பிரதிகள்**
**7ம் பதிப்பு: 2018 மே, 3,000 பிரதிகள்**
**8ம் பதிப்பு: 2020 பிப்ரவரி, 7,000 பிரதிகள்**

# உள்ளே...


## 1. ஜெபியுங்கள்!

a) எப்பொழுதும் ஜெபியுங்கள்!
b) சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள்!

## 2. யாருக்காக ஜெபிக்க வேண்டும்?

a) உங்களுக்காக ஜெபியுங்கள்!
b) உங்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்!
c) உங்கள் தேசத்திற்காக ஜெபியுங்கள்!

## 3. எப்படி ஜெபிக்க வேண்டும்?

a) தடைகளை நீக்கி, ஜெபியுங்கள்!
b) இயேசுவின் நாமத்தில் ஜெபியுங்கள்!
c) விசுவாசத்தோடு ஜெபியுங்கள்!
d) தேவ சித்தத்தின்படி ஜெபியுங்கள்!

## 4. ஆபத்துக் காலத்தில் ஜெபிப்பது எப்படி?

a) ஸ்தோத்திர பலியிட்டு, ஜெபியுங்கள்!
b) பொருத்தனைகளைச் செலுத்தி, ஜெபியுங்கள்!
c) கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள்!

## உங்கள் சகோதரனிடமிருந்து...



**"ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்." சங். 65:2.**

நமக்கு ஒரு தேவன் உண்டு! அவர், நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறவர். நம் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறவர். அவரைத் தேடி, எங்கும் அலைய வேண்டியதில்லை. நம் ஜெபத்தைக் கேட்கும் தூரத்தில்தான் அவர் இருக்கிறார்.

எந்தச் சமயத்திலும் நாம் ஜெபிக்கலாம்! எந்தக் காரியத்திற்காகவும் நாம் ஜெபிக்கலாம்! நம் ஜெபத்தைக் கேட்டு, பதில் கொடுக்க அவர் எப்போதும் ஆயத்தமாயி ருக்கிறார். ஆனால், பல சமயங்களில், "நம் ஜெபத்திற்குப் பதில் வரவில்லையே?" என்று தடுமாறுகிறோம். தவறுகள் ஜெபிக்கிற நம்மிடத்தில் இருக்குமே தவிர, ஜெபத்தைக் கேட்கிற கர்த்தரிடத்தில் இல்லை.

நாம் எப்படி ஜெபித்தால், தேவனிடத்திலிருந்து பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும்? நாம் ஜெபிக்கும்போது, கவனிக்க வேண்டிய காரியங்கள் என்ன? நாம் என்னென்ன காரியங்களுக்காக ஜெபிக்க வேண்டும்? என்பதையெல்லாம் தேவனுடைய வார்த்தையாகிய வேதப் புத்தகம் தெளிவாய் சொல்கிறது. இதைத்தான் நீங்கள் சுலபமாக விளங்கிக் கொள்ளும்படி, இப்புத்தகத்தில் எழுதியுள்ளேன்.

**இப்புத்தகம், உங்கள் ஜெப வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும்** என விசுவாசிக்கிறேன். இதை வாசிக்கிற **நீங்கள், ஒரு ஜெப வீரராக மாற வேண்டும்** என்ற ஜெபத்தோடு வெளியிடுகிறேன்.

இப்புத்தகத்தின் மூலமாக, நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மையை கட்டாயம் எனக்கு எழுதுங்கள்.

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,



# 1 ஜெபியுங்கள்!

**"சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர்** (இயேசு) **ஒரு உவமையைச் சொன்னார்:" லூக்கா 18:1.**

பாவம், வியாதி, பிரச்சனை, போராட்டம், கடன் தோல்வி, வேதனைகளுக்கு நடுவில், "என்ன செய்வது" என்று தடுமாறிக் கொண்டிருக்கிறீர்களா?

**ஜெபம் பண்ண வேண்டும்.** ஆம். ஜெபம் பண்ண வேண்டும். நமக்கு ஒரு தேவன் உண்டு. அவர் ஜெபத்தைக் கேட்கிறவர் **(சங். 65:2).** நம் ஜெபத்தைக் கேட்கிறவர் மட்டு மல்ல, ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறவருமாயிருக்கிறார் **(எரே மியா 33:3).**

"என் தேவைகள் ஆண்டவருக்குத் தெரியுமே! பிறகு, நான் ஏன் ஜெபிக்க வேண்டும்?" என்று சொல்கிறவர்களுண்டு.

உண்மைதான்! நம்முடைய தேவைகள், பிரச் சனைகள், சூழ்நிலைகள் யாவும் கர்த்தருக்குத் தெரியும். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை.

என்றாலும், நாம் ஜெபத்தில் கேட்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். நம்முடைய ஜெபத்தின் மீது, அவர் அதிகப் பிரியமுள்ளவர். நம்முடைய ஜெபத்தை, அவர் விரும்புவ தோடு மாத்திரமல்ல, கேட்டு, அதற்குப் பதிலளிப்பார்.

நாம் ஜெபிக்காதபடி, கர்த்தரிடத்திலிருந்து ஒன்றை யும் பெற்றுக் கொள்ள முடியாது.

**"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;..." (மத்தேயு 7:7)** என்று இயேசு வாக்குப் பண்ணியுள்ளார்.

அநேகர், "ஊழியக்காரருக்கு என் பிரச்சனையைச் சொல்லி விட்டேன். எனக்காக ஜெபிக்க ஊழியக்காரருக்குக் கடிதம் எழுதி விட்டேன். அவர்கள் எனக்காக ஜெபிப்பார்கள்" என்று சொல்வார்கள்.

ஆனால், தாங்கள் ஜெபிப்பதே இல்லை. எத்தனை ஊழியர்கள் உங்களுக்காக ஜெபித்தாலும், நீங்கள் ஜெபிக்காவிட்டால், ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்ய முடியாது.

உங்கள் ஜெபத்தையே கர்த்தர் எதிர்பார்க்கிறார். நீங்கள் ஆண்டவரை நோக்கி ஜெபிப்பீர்களானால், உங்களுக்காக மற்றவர்கள் ஜெபிப்பதையும் கர்த்தர் கேட்பார்.

ஒரு தாயார், ஒரு தேவ ஊழியரிடம் வந்து, தனக்காக ஜெபிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். ஊழியர், அந்தத் தாயாரைப் பார்த்து, “நீங்களும் ஜெபிக்க வேண்டும்” என்றார்.

“பாவியாகிய என்னுடைய ஜெபத்தை எப்படிக் கர்த்தர் கேட்பார்? ஆகவே, எனக்காக நீங்கள் ஜெபியுங்கள்” என்று அந்தத் தாயார் கூறினபோது,

“கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்கக் கூடாதபடி, நீங்கள் ஆண்டவரை விட்டு தூரமாயிருக்கிறீர்களானால், உங்களுக்காக நான் ஜெபிப்பதிலும் பிரயோஜனம் இல்லை” என்று பதில் கூறினார்.

உண்மைதான். “கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்க மாட்டார்” என்று சொல்லும்படி, நீங்கள் கர்த்தரை விட்டு தூரமாயிருப்பீர்களானால், உங்களுக்காக எத்தனை ஊழியர்கள் ஜெபித்தாலும் பிரயோஜனம் இல்லை.

நீங்கள் மனந்திரும்ப வேண்டும். ஆண்டவர் இயேசுவோடு, உங்கள் ஐக்கியத்தை சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். இயேசுவுக்கும், உங்களுக்கும் நடுவாயிருக்கிற காரியங்களை அப்புறப்படுத்த வேண்டும்.

பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு, அவருக்குப் பிரியமாய் வாழும்போது, எந்தச் சமயத்திலும் அவரை நோக்கி ஜெபிக்கக் கூடிய தைரியமுள்ளவர்களாய் இருப்போம். அவர் நம் ஜெபத்தைக் கேட்கக் கூடிய நல்ல தகப்பன். மனந்திறந்து அவரிடம் கேட்கலாம். நம்மைத் தவறாகப் புரிந்து கொள்ளவே மாட்டார்.

**“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.**

**அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.” பிலி. 4:6,7.**

ஆம்! உங்கள் கவலைகளையும், வேதனைகளையும், பிரச்சனைகளையும் உங்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டு **கலங்காதிருங்கள்**. எல்லாவற்றையும், ஜெபத்தில் உங்கள் பரம தகப்பனாகிய இயேசுவுக்குத் தெரியப்படுத்துங்கள்.

உங்களை வேதனைப்படுத்துகிற எந்தக் காரியமானாலும், உங்கள் ஆவிக்குரிய பிரச்சனை, குடும்பப் பிரச்சனை, தொழில் பிரச்சனை, வேலைப் பிரச்சனை, பணப் பிரச்சனை, பிள்ளைகளைக் குறித்த பிரச்சனை... என்று எந்தப் பிரச்சனை யானாலும், அதை ஜெபத்தில் இயேசுவுக்குத் தெரியப் படுத்துங்கள்.

இன்றும் ஏதோ ஒரு பிரச்சனையோடும், வேதனையோடும் இந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? இப்பொழுதே முழங்கால்படியிடுங்கள். இயேசுவோடு பேசுங்கள். உங்கள் வேதனைகளை அவரிடம் சொல்லுங்கள்.

## a) எப்பொழுதும் ஜெபியுங்கள்!

**“சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர்** (இயேசு) **ஒரு உவமையைச் சொன்னார்:” லூக்கா 18:1.**

சிலர், துன்பம் வரும்போது மட்டும் ஆண்டவரை நோக்கி ஜெபிப்பார்கள். மற்ற நேரங்களில் கர்த்தரை மறந்துவிடுவார்கள்.

சிலர், எல்லாம் நன்மையாக நடக்கும்போது மட்டும் கர்த்தரைத் துதித்து, ஜெபிப்பார்கள். பிரச்சனை வரும்போது, முறுமுறுத்து, கர்த்தரைக் குறை சொல்வார்கள்.

ஆனால், இன்பத்திலும், துன்பத்திலும், வெற்றியிலும், தோல்வியிலும், லாபத்திலும், நஷ்டத்திலும், எல்லா சமயத் திலும் ஆண்டவரை நேசித்து, ஜெபிக்க வேண்டும் என்பதையே அவர் எதிர்பார்க்கிறார்.

என் வாழ்க்கையில் என்ன சம்பவித்தாலும், அதை நான் ஜெபத்தில் தேவனுக்குத் தெரியப்படுத்தாமல் இருப்பதில்லை. ஆண்டவர் எனக்குச் செய்த நன்மைகளை, அவர் கொடுத்த ஆசீர்வாதங்களை, அந்த ஆசீர்வாதங்களைப்

பெற்றபோது, என் உள்ளத்தில் ஏற்பட்ட சந்தோஷத்தை, ஒவ்வொன்றையும் ஜெபத்தில் சொல்லி, அவரைத் துதித்து, மகிழ்வேன்.

பிரச்சனைகள், போராட்டங்கள் வரும்போது, எனக்கு ஏற்படும் எல்லா வேதனைகளையும், என் ஆத்துமாவில் ஏற்படும் சோதனைகளையும், என் உள்ளத்தில் எழும்பும் எண்ணங்களையும், மற்ற எல்லாவற்றையும் ஜெபத்தில் தேவனுக்குத் தெரியப்படுத்துவேன்.

எனக்கு வரும் நிந்தைகளை, பரியாசங்களை, அவைகள் வரும்போது, என் உள்ளத்தில் ஏற்படும் வேதனைகள் ஒவ்வொன்றையும் ஜெபத்தில் ஆண்டவருக்கு நான் சொல்வதுண்டு.

என் பெலவீனங்களை, என் தோல்விகளை, என் குறைகளை, ஒன்றையும் நான் தேவனுக்கு மறைப்பதில்லை. எல்லாவற்றையும் அவருக்குச் சொல்லி, அவருடைய கிருபையைப் பெற்றுக் கொள்வேன்.

நம்மைப் புரிந்து கொள்ளக்கூடிய நல்ல ஆண்டவர் இயேசு கிறிஸ்து. நாம் எப்போதும் எல்லாக் காரியத்திற்கும் இயேசுவை நெருங்கலாம்.

**''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.'' 1தெச. 5:17.**

ஆம். காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும், இரவிலும், **எப்பொழுதும் இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.**

வீட்டிலும், வெளியிலும், போக்கிலும், வரத்திலும், **எப்பொழுதும் நம்முடைய ஆத்துமா தேவனோடு இசைந்திருக்க வேண்டும்.**

வீட்டில், ஒரு மூலையில் முழங்கால்படியிட்டு, ஜெபிப்பதுதான் ஜெபமல்ல. வீட்டு வேலைகளைச் செய்து கொண்டே ஜெபிக்கலாம்.

உங்கள் தொழிலை கவனித்துக் கொண்டே ஜெபிக்கலாம். பிரயாணத்தில் இருந்து கொண்டே ஜெபிக்கலாம். நீங்கள் எந்த வேலையைச் செய்தாலும், அதற்கு நடுவில் ஆண்டவரோடு பேசலாம்.

நம்முடைய வாழ்க்கையில், நம்மோடு ஒன்றாகக் கலந்திருக்க விரும்புகிறவர், நம்முடைய ஆண்டவர் இயேசு. ஒரு நாளின் 24 மணி நேரமும் அவர் நம்மோடு இருக்கவே விரும்புகிறார். நம் ஜெபத்தைக் கேட்க விரும்புகிறார்.

**எல்லாக் காரியங்களுக்காகவும் எப்பொழுதும் ஜெபியுங்கள்.**

இந்தப் புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, துக்கத்தினால், வேதனையினால் ஜெபிக்க மனமற்று, பாரத்தோடு இருக்கிறீர்களா? உடனே முழங்கால் படியிடுங்கள்.

உங்கள் துக்கத்தையும், வேதனையையும், தோல்விகளையும், நஷ்டத்தையும் அவரிடம் சொல்லி ஜெபியுங்கள். ஜெபிக்க மனமற்றிருப்பதையும் அவருக்குச் சொல்லுங்கள். இப்பொழுது, நீங்கள் இருக்கிற இடத்திலேயே ஜெபிக்கலாம்.

## b) சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள்!

**"சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ண வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர்** (இயேசு) **ஒரு உவமையைச் சொன்னார்:" லூக்கா 18:1.**

"ஜெபம் பண்ணி என்னத்தைக் கண்டேன்? ஆண்டவர்தான் என் ஜெபத்தைக் கேட்கவில்லையே? எவ்வளவு நாட்களாக நான் இந்தக் காரியத்திற்காக ஜெபிக்கிறேன்.

ஏன் ஆண்டவர் இன்னும் எனக்குப் பதில் கொடுக்கவில்லை?" என்று சொல்கிற அநேகரைப் பார்த்திருக்கிறேன்.

காரணம், ஜெபத்தில் ஏற்படுகிற சோர்பு. நம்முடைய ஜெபத்திற்குப் பதில் வரத் தாமதிக்கும்பொழுது, சோர்ந்து போகிறோம்.

இன்று உங்கள் ஜெப வாழ்க்கையில் சோர்ந்திருக்கிறீர்களா? ஆண்டவர் இயேசு, உங்களுக்குச் சொல்கிறார், **"சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ண வேண்டும்"** என்று.

நம் ஜெபத்திற்கு உடனே பதில் வராததினால், 'ஆண்டவர் நம் ஜெபத்தைக் கேட்கவில்லையே!' என்று அர்த்தமல்ல. நம் ஜெபத்திற்கு எப்போது, எங்கே, எப்படி பதில் கொடுக்க வேண்டும்? என்று கர்த்தருக்குத் தெரியும்.

நாம் எப்பொழுதுமே அவசரப்படக் கூடியவர்கள். ஜெபித்தவுடனே காரியங்கள் நடந்துவிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால், ஆண்டவர் எப்பொழுதுமே நிதானமாகக் காரியத்தைச் செய்யக் கூடியவர்.

**ஆண்டவர் தாமதித்தாலும் பிந்த மாட்டார்.**

எப்பொழுது, நம் ஜெபத்திற்குப் பதில் கொடுக்க வேண்டுமென்று அவருக்குத் தெரியும். அவருடைய ஞானம் அளவிட முடியாதது. அவர் கட்டாயம் பதில் கொடுப்பார். ஆனால், நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

ஒரு தாயார், தன் மகனின் இரட்சிப்புக்காக ஜெபிக்க ஆரம்பித்தார்கள். ஒரு வருஷம்..., இரண்டு வருஷம் கடந்தது. சோர்ந்து போகாமல் ஜெபித்தார்கள். ஐந்து வருடம்..., பத்து வருடம் கழிந்தது. தொடர்ந்து ஜெபித்தார்கள்.

பதினெட்டு வருடங்கள் ஜெபித்தார்கள்! கர்த்தர், அந்த மகனை இரட்சித்து, வல்லமையுள்ள ஒரு ஊழியக் காரனாக மாற்றினார்.

தேவனிடத்திலிருந்து அந்த அற்புதத்தைப் பெற்றுக் கொள்ள, அந்தத் தாயார், பதினெட்டு வருடங்கள் சோர்ந்து போகாமல் ஜெபித்தார்கள்.

உங்கள் கணவரின் இரட்சிப்புக்காக, உங்கள் பிள்ளைகளின் இரட்சிப்புக்காக, உங்கள் குடும்ப ஆசீர் வாதத்திற்காக, பிள்ளைகளின் திருமணத்திற்காக, கர்ப்பத்தின் கனிக்காக, நிரந்தர வேலைக்காக, கடன் பிரச்சனை மாற, ஊழியத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்து, ஜெபித்து, பதில் வராதபடியினால் சோர்ந்து விட்டீர்களா? ஜெபம் பண்ணு வதையே நிறுத்தி விட்டீர்களா?

இயேசு உங்களுக்குச் சொல்கிறார்:

**“...தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடு கிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர் களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?**

**சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ் செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.” லூக்கா 18:7,8.**

மறுபடியும் ஜெபியுங்கள்! எப்பொழுதும் ஜெபி யுங்கள்! சோர்ந்து போகாமல் ஜெபியுங்கள்!

கர்த்தர் சீக்கிரத்திலே உங்களுக்குப் பதில் கொடுப்பார்.

அவர் தாமதித்தாலும் பிந்த மாட்டார். சரியான நேரத்தில் உங்களுக்கு அற்புதம் செய்வார். **கலங்காதிருங்கள்!** 'பிந்தி விட்டது' என்று நீங்கள் நினைக்கலாம். ஆனாலும், ஆண்டவருடைய வேளை இன்னும் வரவில்லை. அவர் ஒரு வினாடிகூட பிந்த விட மாட்டார்.

சோர்ந்து போகாமல் இரவும், பகலும் ஜெபம் பண்ணிக் கொண்டேயிருங்கள். பெற்றுக் கொள்ளும் வரை ஜெபம் பண்ணுங்கள். சீக்கிரத்திலே அற்புதத்தைக் காண்பீர்கள்.

2

# யாருக்காக ஜெபிக்க வேண்டும்?

## a) உங்களுக்காக ஜெபியுங்கள்!

நீங்கள் தேவனுடைய பார்வையில் முக்கியமானவர்கள்! உங்கள் ஆத்துமா காத்துக் கொள்ளப்பட வேண்டும். உங்கள் பரிசுத்த வாழ்க்கையின் மீது தேவன் அக்கறையுள்ளவர். அனுதினமும், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு விரோதமாகப் போராடுகிற ஒரு சக்தியைக் காண்பீர்கள். இந்தப் போராட்டத்தில் ஜெயம் பெற வேண்டுமானால், நீங்கள் உங்களுக்காக ஜெபிக்க வேண்டும். "**...நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?**

**நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது..." (மத்தேயு 26:40,41)** என்று, இயேசு தன் சீஷர்களிடத்தில் கூறினார்.

இன்றும் அவரைப் பின்பற்றுகிற உங்களைப் பார்த்து இயேசு சொல்கிறார்: "நீங்கள் ஒருமணி நேரம் என்னோடேகூட விழித்திருக்கக் கூடாதா?" ஆம். ஒரு தேவனுடைய பிள்ளை, ஒருநாளில், குறைந்தது ஒருமணி நேரமாவது தேவனோடு தனித்திருந்து ஜெபிக்க வேண்டும்.

உங்களுக்காக, உங்கள் பிரச்சனைக்காக, பரிசுத்த வாழ்க்கைக்காக, உங்கள் ஆவிக்குரிய வல்லமைக்காக, காத்திருந்து ஜெபிக்க வேண்டும். இயேசுவைப் பாருங்கள், "**அவர்** (இயேசு) **அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண் ணினார்." மாற்கு 1:35.** இயேசு கிறிஸ்து, ஒருநாளை ஆரம்பிக் கும்போது, அதிகாலையில் தனித்து ஜெபம் பண்ணினார்.

தேவப் பிள்ளையே, தினமும் அதிகாலை நேரம் உங்கள் ஜெப நேரமாயிருக்கட்டும். நீங்கள் உலக வேலைகளை ஆரம்பிக்கும் முன்பாக, மற்ற மக்களைச் சந்திக்கும் முன்பாக, முதலாவது, தேவனுடைய பாதத்தில் காத்திருந்து ஜெபியுங்கள். வேதத்தைத் தியானித்து ஜெபியுங்கள்! தேவ

வல்லமையைப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது, அந்த நாளில் உங்களுக்கு என்ன சோதனை வந்தாலும், அதை நீங்கள் சுலபமாக மேற்கொள்ளலாம்.

இரட்சிக்கப்பட்ட ஒரு வாலிபன், தன் கல்லூரி விடுதி யிலிருந்து, தன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில், "அம்மா, நான் அதிகாலையில் ஒருமணி நேரம் என்றைக்கு ஜெபிக்கவில்லையோ, அந்த நாள் முழுவதும், மயிர் கத்தரிக் கப்பட்ட சிம்சோனைப்போல் ஆகி விடுகிறேன்" என்று, தன் ஆவிக்குரிய அனுபவத்தைக் குறித்து எழுதினான். மயிர் கத்தரிக்கப்பட்ட சிம்சோன், வல்லமை இழந்த சிம்சோன், தோல்வி அடைந்த சிம்சோன்.

**அதிகாலையில் ஒருமணி நேரமாவது காத்திருந்து நீங்கள் ஜெபிக்காவிட்டால், ஆவிக்குரிய வாழ்க்கையில் வல்லமையை இழந்து, தோல்வியைக் காண்பீர்கள்.**

நீங்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்கும் முன்பாக, தேசத்திற்காக ஜெபிக்கும் முன்பாக, உங்களுக்காக, உங்கள் பரிசுத்தத்திற்காக, உங்கள் ஆவியின் பெலனுக்காக ஜெபிக்க வேண்டும். **ஒழுங்கான ஜெப வாழ்க்கை இல்லாவிட்டால், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வெற்றி இருக்காது.**

ஒரு குறிப்பிட்ட பாவம், உங்களை அடிக்கடி மேற் கொள்ளுமானால், அதற்காக, விசேஷமாக உபவாசித்து ஜெபியுங்கள். "அந்தப் பாவத்தின் மீது வெற்றி வேண்டும்" என்று நீங்கள் ஜெபிக்கும்போது, அதை மேற்கொள்ளக்கூடிய கிருபையை தேவன் உங்களுக்குத் தருவார்.

நான், என் இந்தியா தேசத்திற்காக ஜெபிக்கிறேன், மிஷனெரிகளுக்காக ஜெபிக்கிறேன், ஊழியர்களுக்காக ஜெபிக்கிறேன், ஜெபிக்கும்படியாக எனக்குக் கடிதம் எழுதும் மக்களுக்காக ஜெபிக்கிறேன், கர்த்தர் எனக்குத் தந்த ஊழியர் களுக்காக ஜெபிக்கிறேன்.

என்றாலும், இவைகளுக்கு முன்பாக, என் சொந்தப் பரிசுத்த வாழ்க்கைக்காக, தினமும் காலையில் ஒருமணி நேரமாவது வேதத்தை தியானித்து, ஜெபிக்கிறேன்.

நீங்களும், இன்று ஒரு தீர்மானம் பண்ணுங்கள். இன்றுமுதல், தினமும் ஒருமணி நேரமாவது தனித்து ஜெபிக்க உங்களை ஒப்புக் கொடுங்கள்.

## b) உங்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள்!

நீங்கள் எப்படி தேவனுடைய பார்வையில் முக்கிய மானவர்களோ, அப்படியே உங்கள் குடும்பமும் கர்த்தருக்கு முக்கியமானது. நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கலாம்! உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் ஆண்டவர் இரட்சிக்க விரும்புகிறார்.

**உங்கள் முழுக் குடும்பமும் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்று, கர்த்தருக்குச் சாட்சியாக இருக்க வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார். இன்னும் இரட்சிக்கப்படாத உங்கள் கணவர், உங்கள் மனைவி, உங்கள் பெற்றோர், உங்கள் சகோதர–சகோதரிகள், உங்கள் பிள்ளைகள், உங்கள் வீட்டிலிருக்கிற யாரோ ஒருவர், அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று கர்த்தர் அதிக விருப்பமுள்ளவராக இருக்கிறார். இதற்காக, உங்களுக்கு வாக்குத்தத்தமும் கொடுத் திருக்கிறார்.

**“...கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்...” அப். 16:31.** இந்த வாக்குத்தத்தம் உங்களுக்காகத்தான், உங்கள் முழுக் குடும்பத்தையும் இயேசு இரட்சிக்க ஆயத்தமாயிருக்கிறார். ஆனால், அந்த வாக்குத்தத்தம், உங்கள் குடும்பத்தில் நிறைவேற, நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

ஆம், உங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்க வேண்டும். உங்கள் குடும்பத்திலுள்ள யாவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபிக்க வேண்டும். நீங்கள் ஜெபிக்கும்போது, தேவன் கிரியை செய்வார். ஒருமுறை ஒரு தாயார், தன் கணவருடைய இரட்சிப்பிற்காக ஜெபிக்க வேண்டுமென்று பாரத்தோடு என்னிடத்தில் கூறினார்கள். நானும், “ஜெபிப்போம், கர்த்தர் உங்கள் கணவரை இரட்சிப்பார்” என்றேன். உடனே அந்தத் தாயார், “அவர் எங்கே இரட்சிக்கப்படப் போகிறார்? அவரை மற்ற யாராலும் முடியாது” என்றார்கள்.

இப்படி அவிசுவாசியாக இருந்தால், ஆண்டவர் எப்படிக் கிரியை செய்ய முடியும்? எப்படிப்பட்ட மனிதரையும் மாற்ற தேவன் வல்லமையுள்ளவர். அவருடைய வல்ல மையை சந்தேகப்படாதீர்கள்.

விசுவாசத்தோடு, ‘‘என் கணவரை ஆண்டவர் இரட்சித்து, சாட்சியாக நிறுத்துவார்” என்று சொல்லுங்கள்.

உங்களை இரட்சித்த கர்த்தர், உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் இரட்சிக்க கருத்தாக ஜெபியுங்கள். தொடர்ந்து ஜெபியுங்கள். பதில் பெறும்வரை ஜெபியுங்கள். அநேக மனைவிமார்களின் கண்ணீர் ஜெபத்தினால், புருஷர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்.

நான் ஒருமுறை, ஒரு சகோதரனுடைய சாட்சியைக் கேட்டேன். அவர், இரட்சிக்கப்பட்ட ஒரு தேவனுடைய பிள்ளை. ஆனால், அவருடைய மனைவி இரட்சிக்கப்படவில்லை. ஆனால், அடிக்கடி தன் மனைவிக்கு ஆண்டவருடைய அன்பையும், தன் இரட்சிப்பின் அனுபவத்தையும் அவர் சொல்லி வந்தார். ஒருநாள், “பக்கத்து வீட்டில் எல்லோரும் சினிமாவிற்குப் போகிறார்கள், நானும் போக வேண்டும்” என்று அந்த சகோதரி, தன் கணவரிடம் கேட்டார்கள். அவரும், ஒன்றும் சொல்லாமல், தன் மனைவியை சினிமாவிற்கு அனுப்பி வைத்தார்.

தன் மனைவி சினிமாவிற்குச் சென்ற பின், அந்த சகோதரன், வீட்டின் கதவைப் பூட்டி விட்டு, முழங்கால் படியிட்டார். சினிமா முடிந்து, தன் மனைவி வரும்வரை, அவர்களுடைய இரட்சிப்பிற்காகக் கண்ணீரோடு அவர் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

சில நாட்கள் கழிந்தது. மறுபடியும் ஒருநாள், சினிமாவிற்குப் போக, அந்த சகோதரி, தன் கணவரிடம் அனுமதி கேட்டார்கள். வழக்கம்போல அவரும், தன் மனைவியை சினிமாவிற்கு அனுப்பி விட்டு, ஜெபிக்க முழங்கால்படியிட்டார். சுமார் ஒருமணி நேரம் கடந்தது. திடீரென்று, யாரோ கதவைத் தட்டுகிற சப்தம் கேட்டது. “சினிமா முடிய, மூன்று மணி நேரம் ஆகுமே! இப்பொழுது யார் கதவைத் தட்டுவது?” என்று எண்ணிக் கொண்டே வந்து, கதவைத் திறந்தார். என்ன ஆச்சரியம்! அவருடைய மனைவிதான் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள்.

“தியேட்டரில் உட்கார்ந்து, சினிமா பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று, ‘நான் செய்வது பாவம்!’ என்று உணர்த்தப்பட்டேன். அதற்குமேல் என்னால் அங்கு உட்கார்ந்

திருக்க முடியவில்லை. எழுந்து வந்து விட்டேன். எனக்காக ஜெபிக்க வேண்டும்" என்று சொல்லி, முழங்கால்படியிட்டார்கள். அன்றைக்கு, அந்த சகோதரி இரட்சிக்கப்பட்டார்கள்.

அந்த சகோதரருடைய கண்ணீரின் ஜெபம், அவருடைய மனைவியை இரட்சிப்பிற்குள் கொண்டு வந்தது. நீங்களும் விசுவாசத்தோடு, உங்கள் வீட்டிலுள்ள இரட்சிக்கப்படாதவர்களுக்காக ஜெபியுங்கள். வாக்குத்தத்தத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டு ஜெபியுங்கள். ஸ்தோத்தரித்து ஜெபியுங்கள். "என் குடும்பமே இரட்சிக்கப்படப் போகிறதற்காக ஸ்தோத்திரம்! நாங்கள் குடும்பமாக, சாட்சியாக நிற்கப் போகிறதற்காக ஸ்தோத்திரம்" என்று கர்த்தரைத் துதித்து ஜெபியுங்கள்.

## c) உங்கள் தேசத்திற்காக ஜெபியுங்கள்!

உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும் மாத்திரம் ஜெபித்தால் போதாது. ஆண்டவர், நம் தேசத்தைக் குறித்து அக்கறையுள்ளவர். நம் தேசத்திலுள்ள ஒவ்வொருவருக்காகவும் அவர் சிலுவையில் மரித்திருக்கிறார். யாவரையும் இரட்சிக்க விரும்புகிறார். ஆகவே, நம் தேசத்திலுள்ள எல்லோரும் இரட்சிக்கப்பட கருத்தாய் ஜெபிக்க வேண்டும். நம் தேசம் ஆசீர்வதிக்கப்பட நாம் ஜெபிக்க வேண்டும்.

**''...எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்;**

**நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும்.'' 1 தீமோ. 2:1, 2.**

குறிப்பாக, நம்மை ஆள்கிற தேசத் தலைவர்களுக்காகவும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். நமது தேசத்தின் பிரதமர், ஜனாதிபதி, மந்திரி மார்கள், முதலமைச்சர்கள், கவர்னர்கள்... என்று, இப்படி அதிகாரத்திலிருக்கிற யாவருக்காகவும் நாம் ஜெபிக்க வேண்டும்.

நம் தேசத்திலிருக்கிற எல்லோரையும் இரட்சிக்க ஆண்டவர் வல்லமை உள்ளவராய் இருக்கிறார்.

ஒரு காலத்தில், தென் கொரியா தேசம் வறுமையிலும், பஞ்சத்திலும் வாடினது. இன்று, அந்த தேசம் சகல விதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டு, செழுமையான தேசமாயிருக்கிறது. அந்த தேசத்தின் மக்கள், நாள்தோறும் கூட்டம் கூட்டமாக மனந்திரும்பி, கர்த்தரை ஏற்றுக் கொள்கிறார்கள். தேசத் தலைவர்களும் இரட்சிக்கப்பட்டு, ஆண்டவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

காரணம் என்ன?

அந்த தேசத்திலுள்ள தேவப் பிள்ளைகள், தங்கள் தேசத்திற்காக கண்ணீரோடு ஜெபிக்க ஆரம்பித்தார்கள். தங்கள் தேச மக்கள் இரட்சிக்கப்படவும், தேசத் தலைவர்கள் இரட்சிக்கப்படவும் கருத்தாய் கண்ணீரோடு ஜெபித்தார்கள். ஜெபிக்க ஜெபிக்க, ஆண்டவர் கிரியை செய்தார். தலைவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஜனங்கள் திரள் திரளாக மனந்திரும்பி வருகிறார்கள். தேசத்தை தேவன் ஆசீர்வதித்தார்.

தென் கொரியா தேசத்தை மாற்றின கர்த்தர், நம் தேசத்தையும் மாற்ற வல்லமை உள்ளவராக இருக்கிறார். **நாம் தினமும் நம் தேசத்திற்காக ஜெபிக்க வேண்டும்.**

தேசத்தில் கர்த்தர் எழுப்பியிருக்கிற மிஷனெரிகளுக்காக ஜெபியுங்கள். தேவ ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். சபையின் எழுப்புதலுக்காக ஜெபியுங்கள். ஜனங்கள் ஜீவனுள்ள தேவனாகிய இயேசுவை அறிந்து கொள்ளும்படியாக ஜெபியுங்கள்.

**தினந்தோறும் ஜெபியுங்கள்! குடும்பமாக ஜெபியுங்கள்! குழுவாக ஜெபியுங்கள்! உபவாசித்து ஜெபியுங்கள்!**

தேவன், நம் தேசத்தை சந்திப்பார்! ஆசீர்வதிப்பார்! இரட்சிப்பார்!

ஒரு வெற்றியுள்ள ஜெப வாழ்க்கைக்கு இன்று உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள். **ஜெபித்தால், ஜெயம் பெறுவீர்கள்!**

3

# எப்படி ஜெபிக்க வேண்டும்?

## a) தடைகளை நீக்கி, ஜெபியுங்கள்!

**"என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்." சங். 66:18.**

ஆம். நாம் ஜெபிக்க முழங்கால்படியிடும்போது, 'நம் இருதயம் ஆண்டவரோடு இணைந்திருக்கிறதா?' என்று சோதித்துப் பார்க்க வேண்டும். நமக்கும், ஆண்டவருக்கும் நடுவாகப் பாவங்கள் இருக்குமேயானால், ஆண்டவர் நம்முடைய ஜெபத்தைக் கேட்க முடியாது.

**"பாவிகளுக்குத் தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்." யோவான் 9:36.**

ஆம். இருதயத்தில் பாவங்களையும், அக்கிரமங்களையும், இச்சைகளையும் வைத்துக் கொண்டு நீங்கள் ஜெபிப்பீர்களானால், கர்த்தர் எப்படி உங்கள் ஜெபத்தைக் கேட்க முடியும்?

உங்களுக்கும், ஆண்டவருக்கும் நடுவாக இருக்கிற பாவங்களை அறிக்கையிட்டு, அவர் உங்களைக் கழுவ இடம் கொடுங்கள். உங்கள் சிந்தனைகளிலும், பார்வையிலும், அந்தரங்கத்திலும் காணப்படும் அசுத்தங்களை அறிக்கையிட்டு, உங்களை சுத்திகரித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் விண்ணப்பங்களை ஏறெடுக்கும் முன்பாக, கர்த்தரோடு உங்கள் ஐக்கியம் சரியாக இருக்கிறதா? என்று யோசித்துப் பாருங்கள்.

உங்களுக்குள் பெருமை, பண ஆசை, கண்களின் இச்சைகள், மாமிச இச்சைகள், பொறாமை, கோப குணம், வீண் வார்த்தைகள், மற்றவர்களுக்கு விரோதமாகப் பேசின வார்த்தைகள், கள்ள சம்பாத்தியம், பொய் நாவு, எரிச்சல், அந்தரங்கப் பாவம்... என்று, இப்படி ஏதோ ஒன்று, உங்களை தேவனை விட்டுப் பிரிக்கிறது.

**“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.” 1 யோவான் 1:9.**

ஆகவே, பாவங்களை அறிக்கையிட்டு, தடைகளை நீக்க வேண்டும்.

மேலும், **“நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.**

**நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.” மாற்கு 11:25, 26.**

நீங்கள் ஜெபம் பண்ணும்போது கவனிக்க வேண்டிய மற்றொரு காரியம், யார் பேரிலாவது உங்களுக்குக் குறைபாடுகள் இருக்குமானால், வருத்தம் இருக்குமானால், நீங்கள் மனப்பூர்வமாக அவர்களை மன்னிக்க வேண்டும். அப்பொழுதுதான், கர்த்தரும் உங்களை மன்னித்து, உங்கள் ஜெபத்தைக் கேட்பார்.

உங்கள் உள்ளத்தில் கசப்பையும், வெறுப்பையும் வைத்துக் கொண்டு, நீங்கள் எத்தனை மணி நேரம் ஜெபித்தாலும் பிரயோஜனம் இல்லை. ஜெபிக்கும் முன்பாக, உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பாருங்கள்.

உங்கள் கணவரைக் குறித்து, உங்கள் மனைவியைக் குறித்து, உங்கள் பிள்ளைகளைக் குறித்து, பெற்றோரைக் குறித்து, மாமியாரைக் குறித்து, மருமகளைக் குறித்து, பக்கத்து வீட்டுக்காரர்களைக் குறித்து, ஏதோ ஒரு குறைபாடு, ஏதோ ஒரு கசப்பு, உங்கள் உள்ளத்தில் இருக்குமானால், முதலாவது அவர்களை மனப்பூர்வமாக மன்னித்து ஜெபியுங்கள். கசப்புகளும், வெறுப்புகளும் உங்கள் உள்ளத்தை விட்டு மாறட்டும். அப்பொழுது, கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்பார்.

‘நான் இப்படித்தான் இருப்பேன்’ என்று உங்களை நீங்களே கடினப்படுத்திக் கொண்டால், கர்த்தருக்கு ஒரு

நஷ்டமும் இல்லை. நீங்கள்தான் ஆசீர்வாதத்தை இழந்து போவீர்கள். நீங்கள் எவ்வளவு ஜெபித்தாலும், கண்ணீரோடு ஜெபித்தாலும், உங்கள் ஜெபத்திற்குப் பதில் வரப் போவ தில்லை.

முதலாவது, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படிந்து, தடைகளை அப்புறப்படுத்துங்கள். அப்பொழுது, கர்த்தர் உங்கள் ஜெபத்தைக் கேட்பார்.

## b) இயேசுவின் நாமத்தில் ஜெபியுங்கள்!

**“நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய் வேன்.” (யோவான் 14:13)** என்று இயேசு சொல்கிறார்.

ஆம், பிதாவாகிய தேவனை நோக்கி, இயேசு கிறிஸ் துவின் நாமத்தில் ஏறெடுக்கப்படாத ஜெபங்கள், அர்த்தமற்ற ஜெபங்கள். அவைகள் பரலோகத்தை எட்டுவதில்லை. தேவன், அந்த ஜெபத்தைக் கேட்பதுமில்லை.

வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரி டத்தில் சேர்வதற்கு நாம் எம்மாத்திரம்? நம்முடைய ஜெபத்தை அவர் கேட்பதற்கு, நமக்கு என்ன தகுதியிருக்கிறது? நம்மு டைய பக்தியோ, நம்முடைய நீதியோ, தேவனிடத்தில் நம்மைக் கொண்டுபோய் சேர்ப்பதில்லை.

தேவனிடத்தில் நாம் சேர்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அந்த ஒரே ஒரு வழி, இயேசு கிறிஸ்து மாத்திரமே! இயேசு கிறிஸ்து நமக்காக, சிலுவையில் நமக்குப் பாவ மன்னிப்பை உண்டாக்கினபடியால், இந்த இயேசு கிறிஸ்து வின் மூலம், நாம் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சேர முடியும்.

ஆகவே, நம்முடைய ஜெபமெல்லாம் இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் ஏறெடுக்கப்பட வேண்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டும்.

அமெரிக்க ஊழியர் ஒருவர், ஆப்பிரிக்காக் கண்டத் திலுள்ள ஆதிவாசிகளைச் சந்திக்கச் சென்றார். பல கிராமங் களுக்குத் தலைவராக இருந்த, ஒரு கிராமத் தலைவனைச் சந்தித்து, அந்தக் கிராம மக்களைச் சந்தித்துப் பேச அனுமதி கேட்டுக் கொண்டார்.

அந்தத் தலைவன், தன் கையிலிருந்த பட்டயம் (கத்தி) ஒன்றை அவருடைய கையில் கொடுத்து, “நீங்கள் போகும் இடமெல்லாம் இதைக் கையில் வைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறினான். அந்த ஊழியக்காரர் போன கிராமங்களி லெல்லாம், அவரைக் கண்டவுடன், ஜனங்கள் தரையில் சாஷ் டாங்கமாய் விழுந்து, அவரை வணங்கினார்கள்.

அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. “நான் அமெரிக் காவில் இருக்கிறபடியால், என்னை வணங்குகிறார்களோ?” என்று எண்ணினார். தனக்கு வழிகாட்டியாக வந்த மனிதனி டத்தில் கேட்டார். அதற்கு அவர், “அவர்கள் உங்களைக் கண்டு, பயந்து வணங்கவில்லை. உங்கள் கையிருக்கும் பட்டயம் எங்கள் தலைவருடையது, அந்தப் பட்டயத்தைத்தான் எல்லோரும் வணங்குகிறார்கள்” என்றார்.

இதேபோல்தான் நம்மைக் கண்டு, எந்தப் பிசாசும் பயப்படுவதில்லை. நம்மைக் கண்டு தேவ தூதர்கள் பயந்து, உதவி செய்வதில்லை. நமக்குள் இருக்கும் இயேசு, நாம் பயன்படுத்தும் இயேசுவின் நாமம், இதுதான் நம்மை உயர்த்துகிறது.

இயேசு கிறிஸ்துவினால் உங்கள் உள்ளம் நிரப்பப் படட்டும். இயேசுவின் நாமத்தை உங்கள் வாய் உச்சரிக்கட்டும். உங்கள் ஜெபத்தில், ‘இயேசு... இயேசு... இயேசு...’ என்று, இயேசுவின் நாமத்தையே சொல்லி ஜெபியுங்கள். அப்பொ ழுது, பரலோகத்தின் தேவன் உங்கள் ஜெபத்தைக் கேட்டு, உங்களுக்குப் பதிலளிப்பார்.

**“என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும், அதை நான் செய்வேன்.” (யோவான் 14:14).**

**இயேசுவின் நாமத்தில் ஜெபியுங்கள். ஏனென்றால், ‘இயேசு’ என்னும் நாமத்தில் முற்றுப் பெறாத ஜெபங்கள், கடிதம் எழுதியும், விலாசம் எழுதாமல் தபால் பெட்டியில் போடப்பட்ட கடிதத்துக்குச் சமம்.**

## c) விசுவாசத்தோடு ஜெபியுங்கள்!

**"...நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்..." (மத். 21:22).**

நீங்கள் ஜெபம் பண்ணும்போது, 'இந்தக் காரியத்திற்காக ஜெபித்துப் பார்க்கலாம்' என்று அல்ல. அல்லது, "கர்த்தர் பதில் கொடுப்பாரோ? கொடுக்க மாட்டாரோ?" என்று இரு மனதோடு அல்ல. "நான் வேண்டிக் கொள்வதைப் பெற்றுக் கொள்வேன்" என்ற விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். **"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்." எபி. 11:6.**

ஆம். நீங்கள் ஜெபிக்க முழங்கால்படியிடும்போது, "கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்கிறார். என் ஜெபத்திற்குப் பலன் அளிக்கப் போகிறார்" என்று விசுவாசித்து, ஜெபிக்க வேண்டும்.

'**ஜார்ஜ் முல்லர்**' என்ற தேவ மனிதர், ஆண்டவர் மீது அசைக்க முடியாத விசுவாசம் வைத்திருந்தார். தன்னுடைய வயதான காலத்தில் ஒருமுறை, ஒரு பட்டணத்தில் பிரசங்கிக்க கப்பலில் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்தார். திடீரென்று, கப்பல் பாதி வழியில் நின்று விட்டது. ஜார்ஜ் முல்லர், கப்பல் தலைவனிடம் (கேப்டன்) விசாரித்தார்.

"பனிப் பாறைகள் சூழ்ந்து விட்டது. இனிக் கப்பலைச் செலுத்த முடியாது. எப்பொழுது பனிப் பாறைகள் விலகுகிறதோ, அப்பொழுதுதான் கப்பல் செல்ல முடியும். சில வார காலங்கள் ஆகலாம்" என்று, கப்பல் தலைவன் விளக்கினான்.

ஜார்ஜ் முல்லர் சொன்னார், "இல்லை. நான் குறிப்பிட்ட நாளில் ஒரு பட்டணத்தில் இருக்க வேண்டும். எனக்காகக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது" என்றார். "உங்களால் அந்த நாட்களுக்குள் போய் சேர முடியாது. நிலைமை மோசமாக இருக்கிறது" என்று, கப்பல் தலைவன் கூறினபோது, "நான் விசுவாசிக்கிற என் கர்த்தரை நான் அறிவேன். அவர் என்னைக் கட்டாயம் கொண்டு போய் சேர்ப்பார்" என்று விசுவாசத்தோடு கூறினார்.

கப்பல் தலைவனால் நம்ப முடியவில்லை. ஜார்ஜ் முல்லர், அந்தக் கப்பல் தலைவனைத் தன்னோடு அழைத்துக் கொண்டு, ஒரு அறையில் ஜெபிக்கும்படியாக முழங்கால் படியிட்டார்.

விசுவாசத்தோடு ஒரு சிறிய ஜெபம் செய்தார். கப்பல் தலைவன் ஜெபிக்க முயன்றபோது, "நீ ஜெபிக்க வேண்டாம்" என்று தடுத்து விட்டார். "முதலாவது, கர்த்தர் என் ஜெபத்தைக் கேட்டு, பனிப் பாறைகளை விலக்கி விட்டார். ஆகவே, இனி நீ ஜெபிக்க வேண்டியதில்லை. இரண்டாவது, உனக்கு விசுவாசம் இல்லை. ஆகவே, கர்த்தர் உன் ஜெபத்தைக் கேட்பதில்லை. நீ வெளியே போய், கப்பலுக்கு முன்பாகப் பார்" என்று அந்தத் தலைவனை அனுப்பினார்.

என்ன ஆச்சரியம்! பனிப் பாறைகள் விலகி, கப்பல் செல்வதற்கான வழி திறக்கப்பட்டிருந்தது. "சில நிமிடங்களுக்குள்ளாக இது எப்படி நடந்தது?" என்று தலைவன் ஆச்சரியப்பட்டான். **விசுவாசம்!** ஜார்ஜ் முல்லரின் விசுவாச ஜெபம்தான், அந்த அற்புதத்தைக் கொண்டு வந்தது.

இன்று, உங்கள் வாழ்க்கையில் முன்னேறிச் செல்ல முடியாதபடி வியாதியா? பிரச்சனையா? நஷ்டமா? போராட்டமா? எதிர்ப்புகளா? விசுவாசத்தோடு ஜெபித்துப் பாருங்கள். அவைகள் தானாக விலகிப் போகும்.

எந்தக் காரியமானாலும், எவ்வளவு பெரிய காரியமானாலும் விசுவாசத்தோடு ஜெபியுங்கள். அற்புதத்தைக் காண்பீர்கள். "**...நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்..." மாற்கு 11:24.**

## d) தேவ சித்தத்தின்படி ஜெபியுங்கள்!

**"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்." 1யோவான் 5:14.**

ஆம். ஜெபத்திலே நாம் கேட்பது, தேவ சித்தத்திற்கு உட்பட்டதாயிருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவும், "உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது" என்று ஜெபித்து, நமக்கு மாதிரியைக் காண்பித்தார். நாம் இச்சிப்பதையெல்லாம் ஜெபத்திலே கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியாது. "நாம் கேட்கிற காரியம், தேவனுக்குச் சித்தமானதுதானா?" என்று ஜெபிப்பதற்கு முன்பாகத் தீர்மானித்து, அறிந்து கொள்ள வேண்டும்.

வேத வசனங்கள் நம்மைக் குறித்த தேவ சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆகவே, நாம் வேதத்தை வாசித்து, தியானித்து, அந்த வேத வசனத்தின்படி ஜெபிக்க வேண்டும்.

பரிசுத்தாவியானவரும் தேவ சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார் **(ரோமர் 8:26,27).** ஆகவே, பரிசுத்த ஆவிக்குள் ஜெபிக்க வேண்டும்.

உங்கள் குடும்பக் காரியம், தொழில் காரியம், பிள்ளைகளின் காரியம், பிள்ளைகளின் திருமணக் காரியம், வேலைக் காரியம் எதுவானாலும், முதலாவது, தேவ சித்தத்தை அறிந்து, அதன்பின் **விசுவாசத்தோடு ஜெபியுங்கள்.** அப்பொழுது, **கர்த்தர் அற்புதங்களைச் செய்வார்.**

உங்கள் ஜெப நேரங்களில் பரிசுத்தாவியானவர் உங்கள் சிந்தனைகளை நிரப்பட்டும். உங்கள் விருப்பங்களை நிரப்பட்டும். உங்கள் யோசனைகளை நிரப்பட்டும். ஆவியானவர் உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை நிரப்பட்டும். பரிசுத்த ஆவியில் நிறைந்து ஜெபிக்கும்போது, தேவனுடைய சப்தம், உங்கள் உள்ளத்தில் பேசுவதைக் கேட்பீர்கள்

நீங்கள் ஜெபிக்க வேண்டியதை ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார். நீங்கள் ஜெபிக்க வேண்டிய விதத்தை ஆவியானவர் உங்களுக்குப் போதிப்பார். ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சோடு உங்களுக்காக வேண்டுதல் செய்வார்.

**"...நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்." (ரோமர் 8:26).**

## சிந்திக்க!

- தனியாக ஜெபிக்காமல், இயேசுவுடன் தனிமையான தொடர்பு இல்லை!

- இயேசுவிடம் தனியாகப் பேசாதவர்கள், மனிதனிடம் மட்டுக்கு மிஞ்சிப் பேசுவார்கள்!

- வாழ்வின் போராட்டங்களைச் சந்திக்க ஒரே வழி, அதிகாலையில் இயேசுவைச் சந்திப்பதே ஆகும்!

- தனியாக நீங்கள் இயேசுவிடம் பேசாதவரை, உங்கள் பாரங்கள் அனைத்தையும் தனியாகவே நீங்கள் சுமப்பீர்கள்!

# 4 ஆபத்துக் காலத்தில் ஜெபிப்பது எப்படி?

ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறீர்களா? என்ன செய்வதென்று கலங்குகிறீர்களா? யாரிடம் போவதென்று திகைக்கிறீர்களா?

வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்த ராகிய தேவன், உங்களைப் பார்த்துச் சொல்கிறார்:

**"...என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடு விப்பேன்,..." சங். 50:15.**

ஆம், எந்தப் பிரச்சனைகளில் இருந்தும் உங்களை விடுவிக்க இயேசு வல்லமையுள்ளவர். உங்கள் பிரச்சனை, வியாதியாயிருக்கலாம்! கடன் பாரமாயிருக்கலாம்! குடும்பக் காரியமாயிருக்கலாம்! ஊழியக் காரியங்களாக இருக் கலாம்! பொல்லாத மனிதர்களால் ஏற்படுகிற வேதனைகளா யிருக்கலாம்!

எதுவானாலும், கர்த்தர் உங்களை விடுதலை யாக்குவார். **விசுவாசியுங்கள்,** கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங் கள். நீங்கள் கூப்பிடும்போதுதான், அவர் உங்களை விடுத லையாக்குவார்.

மாராவின் கசப்பான தண்ணீர் நிமித்தமாக, மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். கர்த்தர் உடனே பதில் கொடுத்து, மாராவின் கசப்பை மதுரமாக மாற்றினார் **(யாத். 15:25).**

தாகமடைந்து, உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில், சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். கர்த்தர் அவருடைய தாகத்தைத் தீர்க்க, லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப் பண்ணி, தண்ணீரைக் கொடுத்தார் **(நியா. 15:18,19).**

கடலில் அமிழ்ந்து கொண்டிருக்கும்போது, பேதுரு கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார். கர்த்தர் உடனே தம் கரத்தை நீட்டி, அவரைத் தூக்கி எடுத்தார் **(மத்தேயு 14:30, 31).** அவர் கள் கூப்பிட்டபோதெல்லாம் உதவி செய்த கர்த்தர், உங்களுக் கும் உதவி செய்வார். அவர் பட்சபாதமுள்ளவர் அல்ல.

உங்களையும் அவர் நேசிக்கிறார். நீங்கள் எந்தச் சூழ்நிலையிலிருந்து கூப்பிட்டாலும், உங்களை விடுவிக்க ஒரு

அற்புதம் செய்வார். **பயப்படாதேயுங்கள், கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.** இன்று உங்கள் கூப்பிடுதலைக் கேட்பார். உடனே உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார். **சந்தேகப்படாதிருங்கள். நீங்கள் தேவனுடைய பார்வையில் விசேஷமானவர்கள்.**

இன்று, உங்களுக்கு ஒரு விடுதலையைத் தரப் போகிறார். "நானும் எத்தனையோ முறை கர்த்தரைக் கூப்பிட்டுப் பார்த்து விட்டேன். அவர் எனக்குப் பதில் தரவில்லையே!" என்று நினைக்கிறீர்களா? "நான் கூப்பிட்டுக் கூப்பிட்டு, சோர்ந்து போனேனே!" என்கிறீர்களா?

நீங்கள் கர்த்தரை எப்படிக் கூப்பிட வேண்டும்? எப்படிக் கூப்பிட்டால், அவர் விடுதலை தருவார் என்பதை இப்பொழுது தியானிக்கப் போகிறாம். **"நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்." சங். 50:14,15.**

## a) ஸ்தோத்திர பலியிட்டு, ஜெபியுங்கள்!

நம்முடைய தேவைகளுக்காகக் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும் முன்பாக, கர்த்தருக்கு ஸ்தோத்திர பலி செலுத்த வேண்டும்.

**"நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு,.... ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்," (சங். 50:14,15)** என்றுதான் கர்த்தர் வாக்குக் கொடுத்திருக்கிறார். "**துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவன்" (சங். 22:3)** என்று வேதம் கர்த்தரைத் குறித்துக் கூறுகிறது. நீங்கள் தேவனைத் துதிக்கத் துதிக்க, அவர் வந்து, உங்கள் நடுவில் வாசம் பண்ணுவார்.

உங்கள் தேவைகளை, பிரச்சனைகளை ஜெபத்தில் தேவனுக்குத் தெரியப்படுத்தும் முன்பாக, கர்த்தரைத் துதித்துப் போற்றுங்கள்.

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்**

**திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." பிலி. 4:6.**

ஒரு அற்புதம் நடந்தால், தேவனைத் துதிக்கலாம்! நம் ஜெபத்திற்குப் பதில் கொடுத்தால், கர்த்தரைத் துதிக்கலாம்! ஒன்றும் நடப்பதற்கு முன்பாகவே எப்படித் துதிப்பது?

"தேவைகளும், பிரச்சனைகளும், போராட்டங்களும் சூழ்ந்திருக்கும்போது, எப்படிக் கர்த்தரை ஸ்தோத்தரிக்க முடியும்?" இது, அநேகருடைய உள்ளத்தில் கேள்வியாக இருக்கிறது.

இந்தப் பிரச்சனைகளுக்கு நடுவிலும் கர்த்தர் உங்களோடு இருப்பதற்காக அவரைத் துதியுங்கள்! அவருக்குத் தெரியாமல், உங்கள் வாழ்க்கையில் எதுவும் சம்பவிப்பதில்லை. அதற்காக அவரைத் துதியுங்கள். போராட்டத்தினால் நீங்கள் அவரை விட்டுப் பின்வாங்காமல், உங்கள் விசுவாசத்தை அவர் காத்துக் கொண்டாரே, அதற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். போராட்டத்தினால் அவர் உங்களுக்கு ஜெயம் கொடுக்கப் போகிறபடியால், அவரைத் துதியுங்கள். இதுவரை கர்த்தர் உங்களுக்குச் செய்த அற்புதங்களுக்காக அவரைத் துதியுங்கள்.

இப்படி நீங்கள் அவரைத் துதிக்கத் துதிக்க, உங்கள் சோர்புகள், பயங்கள் யாவும் மறையும். உங்கள் விசுவாசம் பெலப்படும். "கர்த்தர் அற்புதம் செய்யப் போகிறார்" என்ற எதிர்பார்ப்பு உங்களுக்குள் வரும். துதிகளின் மத்தியில் வாசம் பண்ணும் கர்த்தர், உங்கள் நடுவில் வந்து, உங்களை பெலப்படுத்துவார்.

ஒருமுறை, என்னுடைய ஊழியத்தில் ஒரு பெரிய போராட்டத்தைப் பிசாசு கொண்டு வந்தான். அந்தப் பிரச்சனை என்னை அதிகம் கலங்கப் பண்ணிற்று. பிசாசானவன் என்னைப் பார்த்து சிரித்தான். அதிக சோர்புகள் எனக்குள் எழுந்தது. "இனி அவ்வளவுதான். உன் ஊழியம் முடிந்தது" என்ற எண்ணத்தையெல்லாம் பிசாசானவன் எனக்குள் கொண்டு வந்தான். ஜெபிக்க முழங்கால்படியிட்டேன். எப்படி ஜெபிக்கவென்றே எனக்குத் தெரியவில்லை. என் இருதயம் துக்கத்தினால் தடுமாறிற்று. கர்த்தரை ஸ்தோத்தரிக்க ஆரம்பித்தேன். "இந்தப் பிரச்சனைக்காகக் கர்த்தருக்கு

ஸ்தோத்திரம்! பிரச்சனைக்கு நடுவில் கர்த்தர் என்னோடு இருக்கிறதற்காக ஸ்தோத்திரம்! இதற்கு முன்பாக வந்த போராட்டங்களில் ஜெயம் கொடுத்ததற்காக ஸ்தோத்திரம்! இந்தப் போராட்டத்திலும் ஜெயம் கொடுக்கப் போகிறதற்காக ஸ்தோத்திரம்!"

என்று, கர்த்தரைத் துதிக்கத் துதிக்க, புதிய வல்லமை என்னை ஆட்கொண்டது. என் பாரங்கள் ஓடி மறைந்தது. ஒரு பெரிய விசுவாசம் எனக்குள் எழும்பிற்று.

அந்தப் போராட் டத்தில் ஜெயம் எடுக்க, கர்த்தர் எனக்குக் கிருபை செய்தார். நீங்களும் ஸ்தோத்திர பலியிட்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். கர்த்தர் உங்களை விடுவிப்பார்.

## b) பொருத்தனைகளைச் செலுத்தி, ஜெபியுங்கள்!

**''நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி;**

**ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்,...'' சங். 50:14,15.**

உங்கள் பொருத்தனைகளைச் செலுத்தி, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். கர்த்தர் உங்களை விடுவிப்பார்.

குழந்தை இல்லாத **அன்னாள்**, ஒரு குழந்தைக்காக ஜெபித்தபோது,

**"சேனைகளின் கர்த்தாவே...உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சலக நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படுவதில்லை என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்." 1சாமு. 1:11.**

பொருத்தனையோடு அன்னாள் ஜெபித்தவுடன், கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, பதில் கொடுத்தார். கர்த்தர், உடனே அவளுடைய கர்ப்பத்தை ஆசீர்வதித்தார்.

ஒரு போதகருடைய மனைவி நிறைமாத கர்ப்பி ணியாக இருந்தார்கள். அவர்களுடைய சபையிலுள்ள ஒரு விசுவாசி, அவசரமாக தன் வீட்டில் வந்து ஜெபிக்க, போதரைத்

தேடி வந்தார்கள். போதகர் வீட்டில் இல்லாதபடியினால், "நான் வந்து ஜெபிக்கிறேன்" என்று போதகரின் மனைவி புறப்பட்டுப் போனார்கள். ஒரு கம்பி வேலியைக் குனிந்து தாண்டிச் செல்லும்போது, வேலியிலுள்ள கம்பி வயிற்றில் குத்தி விட்டது. இப்போது போதகரின் மனைவியால் அந்தப் பக்கம் செல்ல முடியவில்லை, இந்தப் பக்கமும் செல்ல முடியவில்லை, ஆபத்தான நிலையில் அகப்பட்டுக் கொண்டார்கள்.

வயிற்றிலுள்ள தன் குழந்தைக்கு, 'ஆபத்து வந்து விடுமோ?' என்று கலங்கினார்கள். அந்த ஆபத்திலிருந்து தன்னை விடுவிக்கக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். பொருத்தனை செய்து கூப்பிட்டார்கள். "ஆண்டவரே, இந்த ஆபத்திலிருந்து என்னை விடுதலையாக்கி, என் வயிற்றிலுள்ள குழந்தையை நீர் காப்பாற்றினால், இந்தக் குழந்தையை உம்முடைய ஊழியத்திற்கே கொடுக்கிறேன்" என்று பொருத்தனை பண்ணி ஜெபித்தார்கள்.

உடனே ஒரு அற்புதம் நடந்தது. கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டார். அற்புதமாக அந்த ஆபத்திலிருந்து அவர்களை விடுதலையாக்கினார். தனக்குப் பிறந்த ஆண் குழந்தையைத் தேவனுடைய ஊழியத்திற்கே அர்ப்பணித்தார்கள்.

**யாக்கோபு,** வெறும் கையோடு தன் தாய், தகப்பனை விட்டுப் புறப்பட்டுச் சென்றபோது, வனாந்திரத்தில் கர்த்தருக்கு ஒரு பொருத்தனை பண்ணினார்.

**"...தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால்,...தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக்கொண்டான்." ஆதி. 28:20, 21, 22.**

கர்த்தர், அந்தப் பொருத்தனையின் ஜெபத்தைக் கேட்டார். யாக்கோபை ஆசீர்வதித்து, மிகுந்த செல்வத்தோடு திரும்பி வரப் பண்ணினார்.

ஒரு தகப்பனாரை எனக்குத் தெரியும். பல ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு சிறிய வியாபாரத்தைத் தொடங்கினார்.

அந்த வியாபாரத்தை ஆரம்பிக்கும்போதே ஒரு பொருத்தனை பண்ணினார்.

"ஆண்டவரே, எக்காரணம் கொண்டும் ஞாயிற்றுக் கிழமை கடையைத் திறக்க மாட்டேன். அந்தநாள் முழுவதும் உமக்காகச் செலவிடுவேன். நீர் எனக்குத் தரும் லாபத்திலெல் லாம் தசம பாகத்தை உமக்குக் கொடுப்பேன். என்னை ஆசீர்வதியும்" என்று, பொருத்தனையோடு ஜெபித்தார்.

கர்த்தர், அந்த ஜெபத்தை ஏற்றுக் கொண்டார். கர்த்தர் அவரை ஆசீர்வதித்து, உயர்த்தினார். இன்று ஏராள மான வேலைக்காரர்கள் அவருடைய கடையில் வேலை செய்கிற அளவு, கர்த்தர் அவரை உயர்த்தியிருக்கிறார். பல தொழில்களைக் கொடுத்து, கர்த்தர் அவரை ஆசீர்வதித் திருக்கிறார்.

பொருத்தனையின்படியே ஞாயிற்றுக்கிழமை அவர் வியாபாரம் செய்வதே இல்லை. லாபத்தையெல்லாம் கணக் கிட்டு, அதில் தசம பாகத்தை (பத்தில் ஒன்றை) கர்த்தருடைய ஊழியங்களுக்குக் கொடுக்கிறார். இதனால் மேன்மேலும் கர்த்தர் அவரை ஆசீர்வதிக்கிறார்.

உன்னதமானவருக்கு உங்கள் பொருத்தனை களைச் செலுத்தி, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் உங்களை விடுவிப்பார்.

## c) கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள்!

இன்று, தங்களுக்கு ஒரு ஆபத்து அல்லது, பிரச்சனை வந்தவுடனே, ஊழியர்களை நோக்கிக் கூப்பிடுகி றார்கள். "எனக்காக, இந்தப் பிரச்சனைக்காக ஜெபியுங்கள்" என்று கடிதம் எழுதி விட்டு, அவர்கள் சும்மா இருப்பார்கள்.

அல்லது, "எனக்காக யார் ஜெபிப்பார்கள்?" என்று, மற்ற விசுவாசிகளைத் தேடுகிறார்கள். ஊழியர்களை ஜெப உதவிக்கு நாடுவது தவறல்ல. மற்றவர்களின் ஜெப உதவி யைத் தேடுவது பாவமுமல்ல. ஆனால், மற்றவர்களின் ஜெப உதவியை நாடும் முன்பாக, நீங்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பி டுங்கள். உங்கள் ஜெபத்தைக் கேட்க, கர்த்தர் ஆவலா யிருக்கிறார். நீங்கள் கர்த்தரை நோக்கி ஜெபிக்காதபடி, உங்களுக்காக எத்தனை ஊழியக்காரர்கள் ஜெபித்தாலும்,

அது உங்களுக்கு ஆசீர்வாதமல்ல. உங்கள் தேவைக்காக நீங்கள் முழங்கால்படியிட்டு கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். நீங்கள் தேவனுடைய பார்வையில் விசேஷமானவர்கள். உங்கள் கூப்பிடுதலின் சத்தத்தைக் கர்த்தர் கேட்பார். உங்களை விடுவிப்பார்.

நீங்கள் எந்த நேரத்தில், எந்த இடத்திலிருந்து அவரைக் கூப்பிட்டாலும், உடனே உங்களுக்குப் பதில் கொடுப் பார். உங்கள் விசுவாசமும், நம்பிக்கையும் ஊழியர்களை நோக்கியல்ல. கர்த்தரையே நோக்கி இருக்கட்டும். கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

எங்கள் திறப்பின் வாசல் ஜெபத்தில் ஒருமுறை, ஒருவர் வந்து சாட்சி கொடுத்தார். அவர் ஒரு கொடிய நோயினால் தாக்கப்பட்டு, மிகுந்த வேதனையோடு பல மாதங்களாக ஜெபத்திற்கு வந்து கொண்டேயிருந்தார். வெகு தூரத்திலிருந்து ஜெபத்திற்கு தவறாமல் வந்து கொண்டே யிருந்தார்.

தன் சுகத்திற்காக ஜெபிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்பட்ட போதிலும், அவர் வாய் திறந்து ஜெபிக்கவே மாட்டார். எல்லோரும் ஜெபிக்கிற நேரம் அமைதியாக இருப்பார். கூட்டம் முடிந்ததும், என்னிடம் ஜெபிக்க வந்து நிற்பார். நான் கை வைத்து ஜெபித்ததும் போவார்.

பல மாதங்களாக அவர் வந்து கொண்டிருந்தும், அவருக்கு ஒரு காரியமும் நடக்கவில்லை, வியாதி சுகமாக வில்லை. ஒருமுறை, ஜெபத்தில் எல்லோரும் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, அவருக்குள் ஒரு எண்ணம் எழுந்தது. “என் சுகத்திற்காக நான் ஜெபித்தால் என்ன?” என்று நினைத்தவராக, தன் வலது கையை வியாதியுள்ள இடத்தில் வைத்து ஜெபிக்க ஆரம்பித்தார். கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்.

உடனே ஒரு அற்புதம் நிகழ்ந்தது. தேவனுடைய வல்லமை தன் மீது இறங்குவதை உணர்ந்தார். வியாதி சுகமாவதை உணர்ந்தார். என்ன ஆச்சரியம்! உடனே அற்புதமாக சுகமானார். பயன்படுத்த முடியாத அவருடைய சரீர உறுப்புகள் அற்புதமாக சுகமானது. மகிழ்ச்சியினால் மேடைக்கு ஓடி வந்தார். கர்த்தர் செய்த அற்புதத்தை சாட்சியாக

அறிவித்தார். "இவ்வளவு நாட்களும் ஊழியர் எனக்காக ஜெபித்து, என்னைக் குணமாக்குவார் என்று எண்ணி வந்தேன். இன்றுதான் நானே என் சுகத்திற்காக ஜெபித்தேன். உடனே கர்த்தர் எனக்கு அற்புத சுகம் கொடுத்தார்!" என்று மகிழ்ச் சியோடு கூறினார்.

**"நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட் டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார்." சங். 118:5**

**"தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட் டார்கள், அவர்கள் இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார்." சங். 107:6.**

**"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டரு ளினார்." சங். 22:24.**

உங்கள் விடுதலைக்காக, உங்கள் சுகத்திற்காக, உங்கள் அற்புதத்திற்காக நீங்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். கர்த்தர் உங்களுக்கு அற்புதம் செய்வார்.

நீங்களும் ஜெபித்துக் கொண்டு, மற்றவர்களுடைய ஜெப உதவியை நாடுவது தவறல்ல. நீங்கள் ஜெபமே செய்யாதபடி, மற்றவர்களுடைய ஜெபத்தை நாடினால் பிரயோஜனமில்லை.

**கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள், கர்த்தர் உங்களை விடுதலையாக்குவார்!**

**‘ஜெபியுங்கள், ஜெயம் பெறுங்கள்!’**

என்ற இப்புத்தகத்தின் மூலம்

# நான் பெற்ற ஆசீர்வாதங்கள்!

(கட்டத்தில் ✓ செய்யவும்)

☐ இயேசு கிறிஸ்துவைப் பற்றி முதன்முதலாக அறிந்து கொண்டேன்.

☐ இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டேன்.

☐ கவலை நீங்கி ஆறுதலடைந்தேன்.

☐ பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டேன்.

☐ -----------------------------------------------

-----------------------------------------------

☐ -----------------------------------------------

-----------------------------------------------

---

எனது முகவரி:

-----------------------------------------------

-----------------------------------------------

-----------------------------------------------

-----------------------------------------------

**குறிப்பு: தயவு செய்து இந்தப் படிவத்தை நிரப்பி, பின்பக்கம் உங்கள் ஜெபக் குறிப்புகளையும் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.**



## ஜெபக் குறிப்புகள்

Pray Get Victory

315000034

JESUS REDEEMS MINISTRIES

இயேசு விடுவிக்கிறார்,
நாலுமாவடி-628 211,
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

Ph: 04639 - 22 00 22.
Email : info@jesusredeems.com Visit: http://www.jesusredeems.com
24 மணி நேர ஜெப உதவிக்கு : 04639 - 22 00 00